©
தமிழ்நாடு அரசு
2026

பதிவெண் :

# கரூர் மாவட்ட அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது

கரூர், ஜனவரி 31, 2026

[ எண் 1

[ தை 17, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு - 2057 ]

## ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை

------

**1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4–ன் கீழ் கரூர் மாவட்டம், ஊராட்சிகளின் ஆய்வாளர் / மாவட்ட ஆட்சித்தலைவரின் இறுதி அறிவிக்கை**

(ந.க.எண் : அ4/4866/2025, நாள்: 31.01.2026)

கரூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 157 கிராம ஊராட்சிகளில் அதிக எண்ணிக்கையிலான குக்கிராமங்கள், மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வீடுகளைக் கொண்ட கடவூர் கிராம ஊராட்சியை பிரித்து 02 கிராம ஊராட்சிகளாக கீழ்க்கண்ட விவரப்படி மறுசீரமைப்பு செய்து அரசாணை (நிலை) எண்.344, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் [பரா–2(1)] துறை, நாள்: 05.12.2025–ன்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கரூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு (எண்.21 நாள்: 11.12.2025) வெளியிடப்பட்டது.

மேற்காண் அரசிதழ் மீது 07.01.2026 அன்று கடவூர் ஊராட்சி ஒன்றியம், கடவூர் ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரசு பிரதிநிதிகளுடன் முதல் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு இக்கூட்டத்தில் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவித்து மனுக்கள் வரப்பெற்றது.

அதனடிப்படையில் 13.01.2026 அன்று இரண்டாம் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு அதில் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை அவர்களின் கடிதம் எண்.12876280/ப.ரா.2(1)/2026–3, நாள்: 30.01.2026 ன் படி வழங்கப்பட்ட அனுமதியின்படி கீழ்க்கண்டவாறு இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

**பிரிக்கப்பட்ட பின்னர் கிராம ஊராட்சிகளின் முழு விவரங்கள்**

**கரூர் மாவட்டம்**

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | கிராம ஊராட்சியின் பெயர் (பிரிக்கப்படும் கிராம ஊராட்சியின் எண்ணிக்கை யுடன்) | குக் கிராமங்களின் எண்ணிக்கை | புதியதாக உருவாக்கப்படும் கிராம ஊராட்சியின் பெயர் (குக் கிராமங்களின் எண்ணிக்கை யுடன்) | குக்கிராமங்களின் பெயர் (பிரிக்கப்பட்ட பின்னர்) |
|---|---|---|---|---|---|
| 1 | கடவூர் | கடவூர் (2) | 34 | தே. இடையப்பட்டி (23) | ஆலத்தூர் |
| | | | | | சித்திரசீலமநாயக்கனூர் |
| | | | | | எழுவக்கரியூர் |
| | | | | | கவுண்டன்பாளையம் |
| | | | | | இடையப்பட்டி |
| | | | | | கொண்டப்பநாயக்கனூர் |
| | | | | | கே. சுக்காம்பட்டி |
| | | | | | முத்துபாப்பு சீலமநாயக்கனூர் |
| | | | | | நடுக்களம் |
| | | | | | பாம்பலம்மன் கோவில்பட்டி |
| | | | | | பாப்பாநாயக்கனூர் |
| | | | | | பெரியப்பட்டி நாயக்கனூர் |
| | | | | | பூஞ்சோலைப்பட்டி |
| | | | | | பூதிகாமநாயக்கனூர் |
| | | | | | புங்கம்பாடி |
| | | | | | சோமநாயக்கனூர் |
| | | | | | தம்மசீலமநாயக்கனூர் |
| | | | | | தண்ணீர்பந்தல் |
| | | | | | தேக்கமலை கோவில்பட்டி |
| | | | | | வடக்கிகளம் |
| | | | | | வடுமநாயக்கனூர் |
| | | | | | வெடிக்கார்நாயக்கனூர் மற்றும் கத்திகாமநாயக்கனூர் |
| | | | | | விராலிப்பட்டி |
| | | | | கடவூர் (11) | கடவூர் |
| | | | | | கீழ்சேவாப்பூர் |
| | | | | | கிழக்கு அய்யம்பாளையம் |
| | | | | | கிழக்கு ராசாப்பட்டி |
| | | | | | கோட்டக்கரை |
| | | | | | மேல அய்யம்பாளையம் |
| | | | | | மேல ராசாப்பட்டி |
| | | | | | சேவாப்பூர் |
| | | | | | சேவாப்பூர் (மேற்கு) |
| | | | | | சுருமான்பட்டி |
| | | | | | வலையப்பட்டி |

மேலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சமுதாய வளர்ச்சி வட்டங்கள் (CD Blocks), ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் 31.12.2025 முதல் அமுலுக்கு வருகிறது.

கரூர்
2026 ஜனவரி 31

**மீ. தங்கவேல்,**
**ஊராட்சிகளின் ஆய்வாளர்/**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கரூர் மாவட்டம்.**

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் திருச்சிராப்பள்ளி அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.